### நதி இணைப்புக்கு முன்னோடியாக திகழ்ந்த

# காளிங்கராயனுக்கு சிலை!

## முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு!!

சென்னை, செப்.19-
நதி இணைப்புக்கு முன்னோடியாக திகழ்ந்த காளிங்கராயனுக்கு சிலை அமைக்கப்படும் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா இன்று வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

விவசாயத்திற்கு இன்றியமையாததாக விளங்கும் நீர் கிடைக்கப் பெறும் வகையில் அணைக்கட்டுகளை உருவாக்கிய பெரியோர் நினைவைப் போற்றும் வகையில் மணி மண்டபங்களை எனது தலைமையிலான அரசு அமைத்து வருகிறது. அந்த வகையில் முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னல் பென்னிகுவிக்கு நினைவு மண்டபம் எனது அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டிய கரிகால் பெருவளத்தானுக்கு



மணிமண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் பல பகுதிகள் பாசனம் பெற நற்பணி ஆற்றியவர் காளிங்கராயன் ஆவார். ஈரோடு மாவட்டத்தின்

3-ம் பக்கம் பார்க்க